
# நற்பொருள் நாற்பது



கவிநாயகர் வி. கந்தவனம்

# நற்பொருள் நாற்பது

## கவிநாயகர்
## வி. கந்தவனம்

கவிஞர் கழகம்
கனடா

# நூல் விபரம்

நூல்: நற்பொருள் நாற்பது

ஆசிரியர்: வி. கந்தவனம்

வெளியீடு: கவிஞர் கழகம், கனடா

முதற் பதிப்பு: ஆகத்து 2012

உரிமை பதிவு: வி. கந்தவனம்

பதிப்பகம்: சாமந்தி இல்லம்

Title: Natporul Naatpathu

Author: V. Kandavanam

Published by: Canada Tamil Poets' Association

First edition: August 2012

Printing and Binding: Samanthi House
MultiSmart Solution
Scarborough, ON
Canada.

Copyright: The Author

# பதிப்புரை

கவிநாயகர் கந்தவனம், பண்டிதர் அலெக்சாந்தர் ஆகியோரிடம் கவிதை இலக்கணம் பயின்று தமிழ் மரபுக் கவிதைகளை யாத்தளிக்கும் அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக் கொண்ட கனடியத் தமிழ்க் கவிஞர்களால் 2011ம் ஆண்டு நவம்பர் மாதம் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் உருவாக்கப்பட்டது.

கழகத்தின் கன்னி முயற்சியாகக் கழக உறுப்பினர் எண்மரின் ஆக்கங்களைக் கொண்ட "பொதிகைப் புதுமலர்கள்" என்னும் மரபுக் கவிதைத் தொகுப்பு நூல் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தால் ஏப்ரல் 2012ல் வெளியிடப்பட்டது.

எமது கழகம் உருவாக விநாயகர் சுழி போட்டு வைத்தவர் கவிநாயகர் கந்தவனம் அவர்கள். அவர்களின் "நற்பொருள் நாற்பது" கவிதை நூலைக் கழகத்தின் முதல் வெளியீடாக வெளியிட்டு வைப்பதில் நாம் அளவற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம்.

கவிநாயகர் கந்தவனம் அவர்கள் உலகத் தமிழர்களிடையே நன்கு அறியப்பட்டவர். இலக்கியத் தொண்டு, ஆன்மீகத் தொண்டு, சமூகத்தொண்டு என இவரின் பணி பல பரிமாணங்களில் விரிவடைந்து பயணிப்பது ஈழத் தமிழர்களாகிய நமக்குச் சிறப்பும் பெருமையும் சேர்க்கிறது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் காலத்துக்குக் காலம் நீதி நெறி இலக்கியங்கள் தோற்றம் கொண்டு தமிழர் சமூகப் பண்பாட்டு விளைநிலத்தில் அறம் என்னும் உரமிட்டு அதன் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் சீராக்கி வளர்த்தெடுத்திருக்கின்றன.

இந்த வகையில் கவிநாயகர் கந்தவனம் அவர்களின் "நற்பொருள் நாற்பது" கவிதை நூலும் புலம்பெயர்ந்த தமிழர் சமூகத்தின் தேவை கருதிப் பிறந்திருக்கிறது எனக் கூறுவது மிகையான கூற்றல்ல. வெறுமனே நீதி நெறிப் போதனைகளாக மட்டுமே அமையாது வாழ்வியலின் இன்றியமையாத அடிப்படைக் கூறுகளை உணர்த்துவதாக இந்நூல் அமைந்திருக்கிறது.

"நற்பொருள் நாற்பது" கடைச் சங்க காலத்து பதினெண் கீழ்க் கணக்கு நீதி நூல்களான நால-டியார், இன்னா நாற்பது, இனியவை நாற்பது ஆகிய நீதி நூல்களை எம் கண்முன்னே நிறுத்துகின்றது.

நேரிசை வெண்பா என்னும் இலக்கணச் செறிவு மிக்க பாக்களுக்குள் எந்தவிதமான இலக்கணமும் பிசகாமல் தனது ஆழமான கருத்துக்களை ஏற்றி அழகிய கவிதைகளைக் கவிஞர் வடித்துள்ளமை அவரின் கவியாற்றலை நன்கு வெளிப்படுத்துகின்றது.

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் முதுமொழியில் நாலும் எனச்

சுட்டப்படும் வெண்பாக்களின் தொகுப்பான நாலடியாருக்கு இணையாக "நற்பொருள் நாற்பது" தமிழ் இலக்கிய உலகில் அங்கீகாரம் பெறும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பல்வேறு இலக்கியப் படைப்புக்களைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு ஆக்கியளித்த கவிநாயகர் அவர்களின் இக்கவிதை நூல் தமிழ் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெறும் என்பதும் நிச்சயம்.

இந்நூலுக்கு அரியதோர் அணிந்துரையை பேராசிரியர் முனைவர் சு. பசுபதி அவர்கள் அளித்திருக்கின்றார்கள். இவர் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் மின்னியல் கணினித் துறையில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அதற்கும் மேலாக இவர் ஓர் ஒப்பற்ற தமிழறிஞரும் உன்னதமான கவிஞருமாவார். இவர் எழுதிய 'கவிதை இயற்றிக் கலக்கு' என்ற கவிதை இலக்கண நூலை நாமும் படித்துப் பயனடைந்துள்ளோம். மனமுவந்து அணிந்துரை தந்த பேராசிரியர் அவர்களுக்கு நன்றி கூறுவதோடு அவரை எங்களுக்கு அறிமுகப்படுத்திய எமது ஆசிரியர் கவிநாயகர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

கவிநாயகர் அவர்களின் இந்தக் கவிதை நூலைக் கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் பதிப்பித்து வெளியிட்டுத் தமிழ் கூறும் நல்லுலகுக்குப் பரிசளிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

கவிநாயகர் கந்தவனம் அவர்களின் இலக்கியப் பணி மேன்மேலும் தொடர்ந்து சிறப்புடன் வளர நாம் நெஞ்சார வாழ்த்துகிறோம்.

நற்பொருள் நாற்பதால் நானிலத்தோர் நல்வழியில்
பொற்புடைய வாழ்வடைவர் போற்றிடவே - உற்றபொருள்
உண்மை உணர்த்தும் உயர்கவிஞர் கந்தவனம்
மண்போற்ற வாழ்க மகிழ்ந்து.

மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா
தலைவர்
கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம்

# அணிந்துரை

முனைவர் சு.பசுபதி
சிறப்புப் பேராசிரியர்,
டொராண்டோ பல்கலைக் கழகம், கனடா.

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி.100 முதல் கி.பி.500 வரை நீடித்த காலம் நீதிநூல் காலம் என்றே சொல்லப்படும். இந்தச் 'சங்கம் மருவிய காலத்தில்' புலவர்கள் இயற்றிய சில நூல்களைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்று குறிப்பிட்டனர். அவற்றில் ஐந்து நூல்கள் காதல் பற்றியும், ஒரு நூல் போர் பற்றியும் இருந்தன. மற்ற நூல்கள் யாவும் நீதி நூல்களே. முதுமொழிக் காஞ்சியைத் தவிர மற்ற பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கையாண்ட யாப்பு வடிவம் வெண்பா. அதனால், சங்க காலத்தை ஆசிரியப்பாக் காலம் என்றால், நீதிநூல் காலத்தை வெண்பாக் காலம் என்றே அழைக்கலாம்.

சங்க காலத்தில் அகம், புறம் பற்றிப் பாடிய புலவர்கள் சங்கம் மருவிய காலத்தில் பல நீதி நூல்களை இயற்றியதற்கு வரலாற்று ஆய்வாளர்கள் தமிழ்நாட்டில் களப்பிரர் நுழைவு, தமிழர் வாழ்க்கையில் அமைதியின்மை போன்ற பல காரணங்களைச் சொல்வர். உண்மை எதுவாகினும் சமூகத்தில் மக்கள் எவ்வாறு வாழவேண்டும், எந்தப் பண்புகளைக் கடைபிடிக்கவேண்டும், எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்த வேண்டிய கடமையைப் புலவர்கள் அந்தக் காலத்தில் உணர்ந்து பல நீதி நூல்களைப் படைத்தனர் என்று சொல்லலாம்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் 'நாற்பது' என்ற எண்ணால் குறிக்கப்படும் நூல்கள் நான்கு. அவை இன்னா நாற்பது இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது. இவற்றுள் முதல் இரண்டும் வெண்பாக்களால் இயற்றப் பட்ட நீதி நூல்கள் இந்த மரபை இலக்கண நூல்களும் சுட்டுகின்றன.

"இடம் பொருள் காலம் இவற்றில் ஒன்றனை
வெண்பா நாற்பதால் விளம்பல் நாற்பது "

(முத்துவீரியம்)

பொருள்பற்றிப்பாடப்பட்டவையேஇன்னாநாற்பதும்,இனியவை நாற்பதும். இந்த மரபின் தொடர்ச்சியாக வருவதுதான் கவிநாயகர் வி.கந்தவனம் அவர்களின் 'நாற்பொருள் நாற்பது' என்ற நீதிநூல். இதனுள் கடவுள் வாழ்த்து, அவையடக்கம், நூற்பயன் என்று மூன்று வெண்பாக்களும், நாற்பது வெண்பாக்கள் கொண்ட நூலும் உள்ளன.

தமிழன்பர்களுக்குக் கவிநாயகர் வி. கந்தவனம் பற்றிய அறிமுகம் தேவையில்லை. அவருடைய பல நூல்கள் மூலமாகவும், இலக்கிய, சமயச் சொற்பொழிவுகள் மூலமாகவும் இறை வழிபாட்டையும், நற்பண்புகளையும், பண்டைத் தமிழ் இலக்கிய மரபையும் வற்புறுத்தி வரும் மாமனிதர் கந்தவனம். ஓர் அருமையான பிறவிக் கவிஞர். பல மாணவர்களை மரபுக் கவிதையில் நாட்டம் கொள்ள வைத்த சிறந்த ஆசிரியர். பக்தி இலக்கிய மரபைக் கடைப்பிடித்து விநாயகப்பா, பாவாரம் போன்ற சிறந்த கவிதை நூல்களைப் படைத்த இந்தக் கவிஞர் தற்காலச் சூழ்நிலைக்கேற்ப நீதி நூலொன்றை இப்போது நம்முன் வைப்பது கவிதையுலகிற்கு ஒரு பேறு. முக்கியமாகக் கனடியத் தமிழர்களைப் பல்லாண்டுகள்

கூர்மையாகக் கவனித்த கவிஞர் 'காலத்தின் குரலாக' நல்ல போதனைகள் பலவற்றை இந்த நீதிநூல் மூலமாகத் தருகிறார். அதனால் புலம் பெயர்ந்த தமிழரின் சமகால வாழ்வை ஆராயும் அறிஞருக்கும் இந்நூல் உறுதுணையாக இருக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை. இவற்றைப் படிக்கும்போது, இவற்றின் கருத்துரைகளை நூலில் ஆங்கிலத்தில் கொடுப்பது தமிழ் படிக்கத் தெரியாதவர்க்கும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் தோன்றுகிறது.

இவ்வெண்பா நூலிலே நல்ல பண்புகள் எவை என்பதை நேரடியாகவும், எதிர்மறையாகவும் சொற்சுவையும், பொருட்சுவையும் இலங்கும்படி படைத்துள்ளார் கவிஞர். அன்பு நம் வாழ்விற்கு எவ்வளவு முக்கியம் என்பதை வலியுறுத்தும் முதல் வெண்பாவிற்குப் பின், கல்வி (2), ஈகை (5, 31), விடா முயற்சி (7), பெற்றாரைப் பேணுதல் (9), ஆணவமின்மை (19) போன்றவற்றை மற்ற பாக்களில் வலியுறுத்துகிறார். தாம் மதிக்கும் நீதிகள் பல சொன்ன வள்ளுவர், ஔவை போன்றோரையும், நாலடியார் போன்ற நூல்களையும் போற்றுகின்றார் (23,24). நம் காலத்தில் வாழ்ந்த மகாத்மா காந்தியை மனவுறுதிக்கொரு காட்டாய்க் கொடுத்துள்ள கீழ்க்கண்ட வெண்பா மிகச் சிறப்பு.

ஆணவம் இல்லாத நம்பிக்கை ஆளாக்கும்
மாணுயர் காந்தி மனவுறுதி - காணின்
உலகே எதிர்த்தாலும் ஊன்றுமுழைப் பெல்லாம்
நலமாய் நடந்தேறும் நம்பு.

தன் இடப்பாகத்தில் உமையை வைத்த சிவபிரானை சுட்டிக் காட்டி நமக்குப் பெண்மையின் சிறப்பை அழகாக எடுத்துரைக்கிறார் கவிஞர்.

பெண்பாலே பண்பு பெருமை அவளாலே
அன்பூறி ஆளும் அதனாலே - பெண்மைதனை
உண்ணேர் உயிர்போல ஓம்புதல் வேண்டுமதே
கண்ணுதலான் காட்டும் கடன்.

நூலில் அங்கங்கே தோன்றும் பல உவமைகள் கவிஞரின் கவித்துவத்தை அறைகூவுகின்றன. கன்றை மறவாத பசு (4), வீழ்ந்தும் பயன்தரும் பனைமரம் (5), பயனற்ற நாற்றுகள் (10), வண்டுகளை ஈர்க்கும் தாமரை (14), புயற்காற்றில் வீழும் முருங்கை மரம் (19) போன்ற உவமைகள் ஒரு நீதிநூலில் கவித்துவம் மிக்கும் பாக்களும் இருக்கமுடியும் என்பதைக் காட்டுகின்றன.

நயமில்லாத இலக்கியங்களுக்குக் காட்டாய்த் தயிரும், இரசமும் இல்லாத சாப்பாட்டையும், முயலைக் கொன்றபின் பலபேர் ஆய்ந்து அதற்குக் கொம்பில்லை என்று முடிவுசெய்தலையும் காட்டியது அங்கங்கே நூலில் தலைதூக்கும் கவிஞரின் இயல்பான நகைச்சுவைக்கு ஒரு நல்ல உதாரணம். நூலிலே சிறப்புடன் விளங்கும் இன்னொரு வெண்பா இதோ:

உண்மை உளத்தூய்மை ஓம்பல் உயிர்பேணல்
வண்மை வழங்குவது மற்றின்னும் - திண்மை
திறஞ்செய்தல் மக்கள் சிறக்கவே சேவை
அறஞ்செய்தல் தொண்டாம் அறி.

'புலவர்க்கு வெண்பாப் புலி' என்ற ஔவையின் வாக்கால், மரபுப்பாக்களில் வெண்பாவின் உயர்ந்த நிலையையும், வெண்பா இயற்றலில் உள்ள சிரமத்தையும் நாம் அறிகிறோம். மேலும், இன்னிசை வெண்பாவை விட நேரிசை வெண்பாக் கடினம் என்பர். அப்படி இருக்கும்போது, இயற்கையாக வந்து விழும் எழிலுடைய எதுகை, மோனைகள் நிறைந்த இந்நூலின் நேரிசை வெண்பாக்கள் கவிநாயகரின் திறனுக்கோர் எடுத்துக் காட்டு.

பல்வகையாம் கல்விப் பயன் (2)
குறையாது தாய்மைக் குணம் (4)
ஏழைகளை ஏய்ப்பார்க் கிடர் (16)
உத்தமரைப் போற்றும் உலகு. (17)
பொய்யருக்கும் இல்லைப் புகழ் (30)
பல்லோர்க்கும் ஈக பகிர்ந்து (31)

போன்றவை அழகான பொழிப்பு மோனையுடன் திகழும் சில நல்ல வெண்பா ஈற்றடிகள்.

கவித்துவம் மிக்க கருத்துகள் மிளிரும் இந்த நூல் தமிழுக்குக் கிட்டிய ஓர் அருமையான நீதிப் பெட்டகம். இத்தகைய நூல் போன்ற பல இலக்கியங்களைப் படைத்துக் கவிநாயகர் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோம்.

கற்றதைப் பெற்றதைக் காலக்கண் ணாடியாய்
நற்பொருள் நாற்பதென நல்கிய - விற்பன்ன!
கந்த வனக்கவிஞ! கந்தன் கருணையால்
சந்ததம் வாழி தழைத்து.

சு.பசுபதி

உ

# நற்பொருள் நாற்பது

## கடவுள் வாழ்த்து

எல்லை கடந்துவளர் எல்லா அறிவினிலும்
வல்ல விநாயகரை வாழ்த்திடுவேன் - அல்லலற
நற்பொருளை வெண்பாக்கள் நாற்பதினால் யானுரைக்க
அற்புதமாய்ச் செய்வார் அருள்.

## அவையடக்கம்

அறிவுரைகள் முன்னர் அதிமிகவே ஆன்றோர்
அறவழியிற் சொல்லி அமைந்தார் - இறையருளால்
பேழ்பொருள்கள் மேலும் பிறழ்வின்றிப் பேருலகம்
வாழ்வுறவே வைப்பேன் மகிழ்ந்து.

(பேழ் - பெருமை.)

## நூல்

அன்பு குடும்பத்தை மட்டுமே ஆள்வதில்லை
அன்பால் உயிர்கள் அனைத்துக்கும் - இன்பஞ்செய்
வாழ்வை அளிப்பவரே அன்பை வளர்ப்பவராம்
தாழ்வுறுவர் மற்றையவர் தாம். (1)

நீள்நிலத்தில் எப்பொருளும் நின்று நிலைப்பதில்லை
ஏழ்பிறப்பும் எல்லோர்க்கும் ஏற்றதுணை - தாழ்வில்லாக்
கல்வியதே ஆகையினால் காலமெலாம் கற்றிடுவீர்
பல்வகையாம் கல்விப் பயன். (2)

மோடு படுமொக்கு மூளை சிறிதுமில்லா
மாடு மடயரென மாணவரைச் - சாடும்
குருமார் குருமாரோ கோயிற் சிலைகள்
அருமை அறியா தவர். (3)

கற்றார் கருத்தூன்றிக் கல்லாக் கடையரையும்
முற்றாகத் தள்ள முனையாராம் - கற்றா
மறவாது கன்றை மறந்தாலும் கன்று
குறையாது தாய்மைக் குணம். (4)

(கற்றா - கன்று ஈன்ற பசு.)

வற்றா வளங்குன்றி னாலும் வழங்கியகை
முற்றாகச் சோர்ந்து முடங்காது - இற்றே
பனைவீழ்ந்து பட்டும் பயன்செய்யும் பண்பு
தனையாய்ந்து பார்க்கத் தகும். (5)

நடையென்ப நல்லார் ஒழுக்கநடை நல்ல
கொடையென்ப இல்லார்க் குதவல் - குடையென்ப
நீதி வழுவாத வெண்கொற்றம் நெஞ்சென்ப
ஆதி முதல்வன் அகம். (6)

விடிவில்லை என்றால் மிகுதொல்லைக் கின்னும்
முடிவில்லை யென்றெண்ணி மூச்சாய் - படியேறி
முன்னேறின் வெற்றி முயலாது சோர்வாருக்(கு)
எந்நாளும் சூழும் இடர். (7)

சொன்னாலும் கேளார் சுயமாயும் சிந்திக்கார்
மன்னாதி மன்னர் மனம்போல - எந்நாளும்
செல்வத்தை வீசிச் செலவழிப்பார் சின்னாளில்
புல்லொத்து வீழ்வார் புறம். (8)

வித்தைகளைக் கற்றென்ன வீரங்கள் பேசியென்ன
சொத்துகளாற் பெற்ற சுகமென்ன - பத்தியுடன்
பெற்றவரைப் பேணும் பெருந்தன்மை யற்றவரை
உற்றவருங் காணார் உணர். (9)

பண்பில்லார் கற்றும் பயனில்லார் ஒன்றுமில்லா
மண்பானை போன்ற வறியாரே - பண்படுத்தி
நட்டு வளர்த்தாலும் நன்றாகா நாற்றுப்போல்
ஒட்டக் கெடுவாரும் உண்டு. (10)

கற்றவர்க்குச் சொல்லொன்று கல்லா தவருக்குப்
பற்றுடனே பத்துப் பரிந்துரைகள் - மற்றும்நல்
மாணவர்க்குப் பார்வை மனைவிக் கதுவுமில்லை
ஆணவர்க்கும் அன்பா யுதம். (11)

ஆணவம் தன்னை அழிக்கமுடி யாதெனினும்
ஆணலத் தாலே அடக்கிடலாம் - காணவொண்ணா
ஆணவத்தால் ஆகும் வெகுளிப்பேய் ஆளவல்லார்
நீணிலத்தில் வாழ்வார் நிலைத்து. (12)

அளவில்நூல் வந்தாலும் யாவும் இணையத்
தளம்தன்னில் இட்டாலும் தக்கோர் - உளம்தன்னை
வெல்லும் வகைசொல் விருந்துகளுக்(கு) இன்னும்தான்
இல்லை உலகில் இணை. (13)

அரங்கேறிப் பேசும் அறிஞர் பலரும்
வரங்கூர்நா வன்மையதால் வாசம் - தருங்கமலம்
வண்டுகளை ஈர்த்தல்போல் மக்கள் அனைவரையும்
சுண்டி இழுப்பர் தொடர்ந்து. (14)

(வரங்கூர் - மேன்மை பொருந்திய.)

நாய்கள் மணந்துவரும் நாற்றம் மிகுந்துவரும்
நோய்கள் பெருகும் நுடங்காது - பேய்கள்
புழுக்கூழைக் காய்ச்சும் புறங்கூறல் வஞ்சம்
அழுக்காறு நெஞ்சம் அதில். (15)

பனைமரங்கள் காய்க்கா பழமரங்கள் பூக்கா
முனையும் முயற்சிகளும் முற்றா - மனையுள்ள
மேழிவளந் தானு மழியும் மிகுமின்னும்
ஏழைகளை ஏய்ப்பார்க் கிடர். (16)

ஆட்சிக் கொடுமை அயலார் அலர்செய்த
மாட்சிக் குறைவு வருமான - வீழ்ச்சியென்றே
நித்தமிடர் வந்தாலும் நேர்மை தவறாத
உத்தமரைப் போற்றும் உலகு. (17)

முன்னோர் வகுத்தவற்றை மூடநம் பிக்கையென
இந்நாள் சிலராய்ந் திகழ்கின்றார் - மன்னும்
அழகார் மதிமீதில் ஆனமறு கண்டும்
உழைவார் சிலரும் உளர். (18)

(உழைவார் - வருந்துவார்.)

நானே அதுசெய்தேன் நானே இதுசெய்தேன்
நானேநா னென்றுநிதம் நாணாமல் - தானே
செறிய நிமிராதீர் சீறுபுயற் காற்றில்
முறியும் முருங்கை மரம். (19)

(தானே செறிதல் - தான் என்னும் ஆணவம் மிகுதல்.)

தன்னியல்பைத் தானறியார் தன்குற்றம் காணாதார்
பின்னிப் பிறர்குற்றம் பேசுவது - மண்ணில்
இறப்பாரைக் கண்டும் இறவார்தாம் என்றே
இறும்பூது கொள்வார் இயல். (20)

'தூங்காமை கல்வி துணிவுடைமை' கொண்டவருக்(கு)
ஆங்காரம் வந்தால் அறிவிழந்து - தீங்குகளைச்
செய்யத் துணிவார் துணிந்தாற் சிறப்பில்லை
உய்யவும் மாட்டார் உணர். (21)

இந்திரனை எண்ணிமிக ஏங்குவதால் என்னபயன்
சந்திரனை வீழ்த்தச் சதிசெய்யும் - சிந்தனைதான்
யாருக்கு முண்டோ அளந்த அளவன்றி
நீருக்கும் இல்லை நிலம். (22)

திருவள்ளு வர்பேர் திகழவ்வை சித்தர்
பெருவாழ்வு நீதிகளைப் பெட்பாய் - திருவாய்
மலர்ந்தும் மனங்கொள்ளா மக்களுக் கென்ன
கலந்தமருந் தீயும் கதி. (23)

வள்ளுவரை வாயார வாழ்த்திவரும் அன்பர்களும்
எள்ளளவும் ஏற்றவரின் இன்மொழியை - உள்ளமுடன்
வாழ்க்கையிலே பின்பற்றி வாழ்வதில்லை வாழ்வாரேல்
மீக்கொள்வர் வாழ்வில் விரைந்து. (24)

(மீக்கொள்வர் - உயர்வர்.)

கம்பருடன் காளமே கம்வில்லி கச்சியப்பர்
அம்புவிக் கன்பால் அளித்தபெரும் - வம்பலரும்
நூல்கள் நுகரார் நுவலுகின்ற நுட்பங்கள்
சால்பறியா வாய்விண்ணர் தாம். (25)

யாதுமூ ரேயாவ ருங்கேளிர் என்றவடி
ஓதுவா ரப்பாலே ஓரடியும் - காதாலும்
கேட்டறியார் கேட்டாலும் கிஞ்சித்தும் பூங்குன்றன்
பாட்டின் பொருளறியார் பார். (26)

ஆணவம் இல்லாத நம்பிக்கை ஆளாக்கும்
மாணுயர் காந்தி மனவுறுதி - காணின்
உலகே எதிர்த்தாலும் ஊன்றுமுறைப் பெல்லாம்
நலமாய் நடந்தேறும் நம்பு. (27)

(காந்தி - மகாத்மா காந்தி.)

மன்னிக்கும் நல்ல மனப்பான்மை உண்டானால்
கன்னிற்கும் நெஞ்சும் கரைந்துருகும் - துன்னற்(கு)
அரிதாவார் தாமும் அருந்தோழர் ஆவார்
பெரிதாகும் இந்தப் பிறப்பு. (28)

(கன்னிற்கும் - கல் நிற்கும். துன்னற்கு - நெருங்குதற்கு.)

பெண்பாலே பண்பு பெருமை அவளாலே
அன்பூறி ஆளும் அதனாலே - பெண்மைதனை
உண்ணேர் உயிர்போல ஓம்புதல் வேண்டுமதே
கண்ணுதலான் காட்டும் கடன். (29)

(கண்ணுதலான் ... - தமது இடப்பாகத்திலே பெண்ணை
வைத்துப் பேணும் நெற்றிக் கண்ணையுடைய
சிவபெருமான் கற்பிக்கும் கடப்பாடு.)

நல்லொழுக்கம் இல்லார்க்கு நாகரிம் இல்லைநலச்
சொல்லொழுக்கம் இல்லார்க்குச் சொற்பொழிவு - இல்லைவலு
ஐவரையும் வெல்லார்க்(கு) அரனார் அறிவில்லைப்
பொய்யருக்கும் இல்லைப் புகழ். (30)

வாழ்க்கை வளமாக வாழ்வதற்கே வையகத்தின்
ஆக்கம் அனைவருக்கும் ஆதலினால் - தேக்கிமிகச்
செல்வத்தைப் பேணாது தெய்வத்தால் வந்ததென்று
பல்லோர்க்கும் ஈக பகிர்ந்து. (31)

ஏதமிலார் மக்கட் பிறப்பின் இயல்பறிவார்
சாதிகளைப் பாரார் சமுதாயம் - பேதமின்றி
வையகத்தில் ஒற்றுமையாய் வாழ வழிவகுத்து
நெய்விளக்காய் ஏற்றிடுவார் நீதி. (32)

சாதிபே தங்கள் தமிழர் சரித்திரத்தில்
ஆதிமுதல் இல்லையவர் ஆட்சியிலே - நீதிமுறை
காத்தவரும் காணாத சாதிமுறை கண்ணிழந்த
சாத்திரிகள் செய்த சதி. (33)

பாடும் குயில்போல ஆடும் மயில்போல
ஈடில் எழுத்தாளர் எப்போதும் - பீடார்
இலக்கியங்கள் நன்றே இயற்றுவராம் இந்த
நிலக்கவலை நீக்க நினைந்து. (34)

தயிரிரச மில்லாத சாப்பாட்டைப் போன்ற
நயமில் இலக்கியங்கள் நாட்டல் - முயலொன்றை
அம்பெய்தி ஐம்பதுபேர் ஆராய்ந்து செய்கின்ற
கொம்பில்லை என்னும் கொலை. (35)

உண்மை உளத்தூய்மை ஓம்பல் உயிர்பேணல்
வண்மை வழங்குவது மற்றின்னும் - திண்மை
திறஞ்செய்தல் மக்கள் சிறக்கவே சேவை
அறஞ்செய்தல் தொண்டாம் அறி. (36)

செய்யும் உதவிகளைச் செய்திகளால் சொல்லியுடன்
வையம் அறியவைக்க மாயாதீர் - தெய்வம்
அருள அறப்பணிகள் ஆற்றினமென் றெண்ணிப்
பொருளீயும் வேண்டாம் புகழ். (37)

புகழுக்குச் செய்வாரின் போலி ஒருநாள்
பகலுக்கு வந்தாகும் பார்த்து - முகத்துக்கு
நின்ற புகழும் நிலையாது நீங்குமென்றும்
பொன்றாப் புகழே புகழ். (38)

வானம் வறண்டாலும் வற்றாக் கடல்போல
மானத் தவர்வறுமை வந்தாலும் - ஈனக்
கரமேந்தி நில்லார் கடுமுயற்சி யாலே
உரமேற நிற்பார் உயர்ந்து. (39)

ஒன்றினைச் செய்தால் உதவி பலவற்றை
நன்றுபின் பெற்றே நலம்பெறலாம் - என்றெண்ணி
தூய குணத்தார் துயர்வரினும் செய்வதிலை
ஆயதமிழ்ப் பண்பும் அது. (40)

# நூற்பயன்

நற்பொருள்கள் நாற்பதையும் கற்பவர்கள் நானிலத்தில்
பொற்புறவே வாழ்வர் புவிபோற்ற - எப்பொழுதும்
நற்பணிகள் செய்தாலும் சொற்புகழை நாடாத
விற்பனரின் மாண்புயர்ந்த விண்.

நற்பொருள் நாற்பது
முற்றும்.

MultiSmart Solution (647) 873-2644